කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture
"ගොවිජන මන්දිරය", 80/5, රජමල්වත්ත පටුමග, බත්තරමුල්ල.
"கொவிஜன மந்திரய", 80/5, ராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
"Govijana Mandiraya", 80/5, Rajamalwatte Avenue, Battaramulla, Sri Lanka.

මගේ අංකය / எனது இல. / My No. NFS/FCG(3)2016/17/Maha(Guide) ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2016.08.19

ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம்

விவசாயப் பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம்

மஹாவலிப் பணிப்பாளர் நாயகம்

மாகாண விவசாயப் பணிப்பாளர்கள்

அனைத்து கமநல அபிவிருத்தி பிரதி / உதவி ஆணையாளர்கள்

அனைத்து கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

## மறுவயற் பயிர்களைச் செய்கைபண்ணும் விவசாயிகளிற்கான உர நிவாரணத் தொகையை வழங்குவதை அமுல் செய்வதற்கான அறிவுறுத்தல்கள் (2016 ஆம் ஆண்டு)

### விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்கள் / மஹாவலி அலகு முகாமையாளர்கள் / கிராம அலுவலர்கள் / அபிவிருத்தி அலுவலர்களின் பணிகள்

**விண்ணப்பங்களை விநியோகித்தல் / பொறுப்பேற்றலும், உண்மைத் தன்மையையும் பரிசோதித்தல்**

1. 2016 இல் மறுவயற் பயிர்களைச் செய்கைபண்ணிய அல்ல செய்கைபண்ணும் அனைத்து விவசாயிகளிற்கும் விண்ணபப்பங்களை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். (2106 இற்கு அச்சிடப்பட்ட H விண்ணப்பப் படிவங்கள் மாத்திரமே செல்லுபடியாகும்).
2. 2016 நிவாரணத்தைப் பெறுவோர்களின் பதிவேட்டில் மேட்டுநிலங்களின் உரிமையாளர்களின் அந்தந்த காணிகளிற்கு அதனுடன் தொடர்பான பெயர் பட்டியலை ஆயத்தம் செய்து, அதற்கமைய கிராம சேவையாளர்களின் பிரிவிற்கமைய விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பப்படிவ இலக்கத்தினை இட்டு பட்டியலின் தொடர் இலக்கத்திற்கமைய விவசாயிகளிற்கு விண்ணப்பப்படிவத்தினைக் கையளிக்கவும். (ஒரே நேரத்தில் அனைத்து விவசாயிகளையும் அழைத்து இதனை நிறைவேற்றிக் கொள்வது இலகுவானதாக அமையும்). (மஹாவலி அதிகாரப் பிரதேசத்தில் இது தொடர்பில் காணிகள் துண்டங்களாக்கப்பட்ட பதிவேட்டில் அந்தந்த விவசாயிகளிற்கான காணி இலக்கத்தை இட வேண்டும்). விண்ணப்பப் படிவங்களை விநியோகித்தல், மீளப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான விடயங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.